<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 09.02.2026</td></tr>
<tr><td colspan="2">CC No. 78/2025</td></tr>
<tr><td colspan="2">சாட்சி : PW1</td></tr>
<tr><td>பெயர் : திரு.அன்பழகன்</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு.</td><td>தொழில் :</td></tr>
<tr><td>கிராமம் :</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : /2026</td></tr>
<tr><td colspan="2">( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்)</td></tr>
</table>

------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் உள்ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை தெரியும். தோட்டத்திற்கும், எனது வீட்டிற்குட்ம சுமார் ஒரு கி.மீ துூரம் உள்ளது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு நான் தோட்டத்திலிருந்து வீட்டிற்கு வரும் போது உள்ஊர்க்காரர்களான எதிரிகளும் அந்த வழியாக வந்தார்கள். மறுநாள் காலை எனது தோட்டத்திற்கு சென்று பார்த்த போது மோட்டார் தண்ணீர் இரைக்கும் பைப்பை காணவில்லை. நான் விசாரித்த போது துரைராஜீம், பழனிச்சாமியும் எதிரிகள் இருவரும் பைப்புகளை கொண்டு சென்ற போது பார்த்த சொன்னார்கள். அதனால் நான் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் போலீசார் பைப் கிடைத்துவிட்டதாகவும் காவல்நிலையத்திற்கு வந்து அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள். நான் காவல்நிலையம் வந்து அடையாளம் காட்டினேன். திருடுபோன பைப்பானது இரும்பு பைப்பாகும், சுமார் 2 அடி நீளமுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பைப்புதான் திருடப்பட்டதா என்றால் இது மாதிரியான பைப்புதான் திருடப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. புகாரை யார் எழுதியது என்றால் மணப்பாறை காவல்நிலையம் அருகில் மனு எழுதும் நபர்களிடம் எழுதி வாங்கினேன். அவரது பெயர் என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார் மனுவை மனு எழுதும் நபர்களிடம் கொடுத்துதான் மனு எழுதி கொடுத்தேன் என்ற விபரத்தை போலீசார்

விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காணாமல் போன பைப் 2 அடி நீளமுள்ளது என்றால் சுமார் 2 அடி நீளம். அந்த பைப்பை யார் எடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பைப் மாதிரி தான் அந்த பைப் இருந்தது. எனது இடத்தில் காணாமல் போன பைப் இந்த பைப்பு இல்லை என்றால் சரிதான். இது மாதிரியான இரும்பு பைப்பாகும். வழக்கில் எதிரிகள் ஈடுபடவில்லை என்றும் நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது புகாரில் எனது தோட்டத்தில் திருட போன பைப்பு எத்தனை அடி நீளமுள்ளது என்றும், என்ன வகையான பைப் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருப்பேன். நான் புகாரில் எத்தனைஅடி நீளமான பைப் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.